'வெற்றி சிறப்பு காய்கறித் தொகுப்பு' விற்பனை

ஆட்சியர் தொடங்கிவைத்தார்

கோவை, நவ. 5: கோவை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் 'வெற்றி சிறப்பு காய்கறித் தொகுப்பு' விற்பனையை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

ரூ.100-க்கு 10 வகையான காய்கறிகள் அடங்கிய விற்பனையை வடகோவை, சிந்தாமணி கூட்டுறவு அங்காடியில் தொடங்கிவைத்த பின்னர், ஆட்சியர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தீபாவளிப் பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையிலும், கூட்டுறவுத் துறை சார்பில் பொதுமக்களுக்கு அன்றாட சமையலுக்குத் தேவையான காய்கறிகளை நியாயமான விலையில் விற்பனை செய்யும் 'வெற்றி சிறப்பு காய்கறித் தொகுப்பு' திட்டத்தை முதல்வர் ச.ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

அதன்படி, கோவை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 கூட்டுறவு விற்பனை நிலையங்களில் நவம்பர் 5-ஆம் தேதி முதல் 7-ஆம் தேதி வரை 10 வகையான காய்கறிகள் அடங்கிய தொகுப்பு ரூ.100 என்ற சிறப்பு விலையில் விற்பனை செய்யப்படும்.

இந்த தொகுப்பில் 500 கிராம் பெரிய வெங்காயம், 500 கிராம் தக்காளி, 250 கிராம் கத்தரிக்காய், 250 கிராம் உருளைக்கிழங்கு, தலா 200 கிராம் கேரட், பீன்ஸ், 100 கிராம் பச்சை மிளகாய், 100 கிராம் எலுமிச்சை, 50 கிராம் இஞ்சி, 400 முதல் 450 கிராம் எடையுள்ள ஒரு தேங்காய் ஆகிய 10 வகையான காய்கறிகள் இடம்பெற்றுள்ளன.

கோவை மாவட்டத்தில் இந்தச் சிறப்பு காய்கறித் தொகுப்பு ரங்கே கவுடர் தெருவில் உள்ள ஸ்ரீ ராமலிங்க சௌடாம்பிகா நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை, அன்னூர் கூட்டுறவு பண்டக சாலை, ஆர்.எஸ்.புரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, பெரியநாயக்கன்பாளையம் லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் பணியாளர்கள் கூட்டுறவு பண்டக சாலை, வடுகபாளையம் பொள்ளாச்சி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலை உள்ளிட்ட இடங்களில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு நபருக்கு ஒரு தொகுப்பு மட்டுமே வழங்கப்படும் என்றார்.



வடகோவை, சிந்தாமணி கூட்டுறவு அங்காடியில் 'வெற்றி சிறப்பு காய்கறிகள் தொகுப்பு' விற்பனையைத் தொடங்கிவைத்த ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர். உடன், சூலூர் சட்டப் பேரவை உறுப்பினர் என்.எம்.சுகுமார் உள்ளிட்டோர்.

நகைப் பட்டறை உரிமையாளரிடம் ரூ.60 லட்சம் மோசடி: உ.பி. சிறையில் உள்ள 3 பேர் கைது

கோவை, நவ. 5: 'பாஸ் ஸ்கேம்' முறையில் நகைப் பட்டறை உரிமையாளரின் பெயரில் கணக்காளருக்கு வாட்ஸ் ஆப் தகவல் அனுப்பி ரூ.60 லட்சம் மோசடி செய்த வழக்கில் உத்தர பிரதேச சிறையில் உள்ள 3 பேரை கோவை மாநகர சைபர் கிரைம் போலீஸார் கைது செய்தனர்.

கோவை மாநகரைச் சேர்ந்த நபர் நகைப் பட்டறையில் கணக்காளராகப் பணியாற்றி வருகிறார். இவரது வாட்ஸ் ஆப் எண்ணுக்கு அண்மையில் குறுந்தகவல் ஒன்று வந்துள்ளது. அதில், நகைப் பட்டறை உரிமையாளரின் படம் மற்றும் பெயர் இடம் பெற்றிருந்ததால், தனது முதலாளிதான் அனுப்பியுள்ளார் என நம்பிய கணக்காளர் அதற்குப் பதிலளித்துள்ளார். அப்போது, எதிர்முனையில் பேசிய நபர், தொழில் ரீதியாக உடனடியாக ரூ.60 லட்சம் தேவைப்படுவதாகக்கூறியதுடன், வங்கிக் கணக்கு எண்ணை அனுப்பியுள்ளார்.

இதை உண்மை என நம்பி நிறுவனத்தின் கணக்கிலிருந்து ரூ.60 லட்சத்தை கணக்காளர் அனுப்பியுள்ளார். சிறிது நேரத்தில் வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு உரிமையாளர் அதிர்ச்சியடைந்து விசாரித்த போது, சைபர் குற்றவாளிகள் 'பாஸ் ஸ்கேம்' முறையில் கைவரிசை காட்டியிருப்பது தெரியவந்தது.

இது குறித்த புகாரின்பேரில், கோவை மாநகர சைபர் கிரைம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். பணம் மாற்றப்பட்ட வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்ததில், அவை உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த லவகேஷ் குமார் சின்ஹா (44), கமல் யாதவ் (45) ஆகியோருடையது என்பதும், இவர்களது கணக்குகளை வினோத்குமார் மிஸ்ரா (55) என்பவர் கமிஷன் அடிப்படையில் சைபர் குற்றவாளிகளுக்குப் பெற்றுத் தந்ததும் தெரியவந்தது.

இவர்கள் மூவரும் ஏற்கெனவே இதேபோன்ற மோசடி வழக்குகளில் உத்தர பிரதேச சிறையில் அடைக்கப்பட்டிருப்பது தெரியவந்ததை அடுத்து, கோவை போலீஸார் அங்கு சென்று மூவரையும் கைது செய்து அழைத்து வந்தனர்.

இவர்கள் மூலம் சைபர் கும்பல் மொத்தம் ரூ.2 கோடி வரை மோசடி செய்திருப்பதும், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட 3 மாநிலங்களில் இவர்கள் மீது இதுபோல பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருப்பதும் தெரியவந்த நிலையில், தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

தீபாவளி: சென்னை – கொல்லம் இடையே சிறப்பு ரயில் இயக்கம்

கோவை, நவ.5: தீபாவளியை முன்னிட்டு, சென்னை - கொல்லம் இடையே போத்தனூர் வழித்தடத்தில் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தீபாவளியை முன்னிட்டு, சென்னை எழும்பூரில் இருந்து நவம்பர் 7, 14 ஆகிய சனிக்கிழமைகளில் இரவு 11.40 மணிக்குப் புறப்படும் சென்னை எழும்பூர் - கொல்லம் சிறப்பு ரயில் (எண்: 06121) மறுநாள் மாலை 4.20 மணிக்கு கொல்லம் நிலையத்தைச் சென்றடையும்.

மறுமார்க்கமாக, கொல்லத்தில் இருந்து நவம்பர் 8, 15 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 மணிக்குப் புறப்படும் கொல்லம் - சென்னை சிறப்பு ரயில் (எண்: 06122) மறுநாள் காலை 11.35 மணிக்கு சென்னை நிலையத்தை வந்தடையும்.

இந்த ரயிலானது காயன்குளம், மாவேலிக்கரா, செங்கண்ணூர், திருவல்லா, சங்கணாச்சேரி, கோட்டயம், எர்ணாகுளம் டவுன், ஆலுவா, திருச்சூர், பாலக்காடு, போத்தனூர், திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம், திருவள்ளூர், பெரம்பூர் உள்ளிட்ட நிலையங்களில் நின்று செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை – திண்டுக்கல் இடையே சிறப்பு மெமு ரயில் இயக்கம்

கோவை, நவ. 5: தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, கோவை - திண்டுக்கல் இடையே சிறப்பு மெமு ரயில் இயக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாலக்காடு ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தீபாவளியை முன்னிட்டு, கோவையில் இருந்து நவம்பர் 6, 7-ஆகிய தேதிகளில் காலை 9.35 மணிக்குப் புறப்படும் கோவை - திண்டுக்கல் சிறப்பு மெமு ரயில் (எண்: 06169) பிற்பகல் 1.10 மணிக்கு திண்டுக்கல் நிலையத்தைச் சென்றடையும்.

மறுமார்க்கமாக, திண்டுக்கல்லில் இருந்து நவம்பர் 6, 7-ஆம் தேதிகளில் பிற்பகல் 2 மணிக்குப் புறப்படும் திண்டுக்கல் - கோவை சிறப்பு மெமு ரயில் (எண்: 06170) மாலை 5.50 மணிக்கு கோவை நிலையத்தை வந்தடையும்.

இந்த ரயிலானது போத்தனூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, உடுமலை, பழனி, ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட நிலையங்களில் நின்று செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர்.

வடவள்ளி, நவ.5: மருதமலை பிரதான சாலையில் பாதாள சாக்கடைப் பணிக்காக தோண்டப்பட்ட இடங்களை சீரமைக்க வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடவள்ளியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கட்சியின் மேற்கு மண்டலச் செயலாளர் சந்திரன் தலைமை வகித்தார்.

இதில், பாதாள சாக்கடைப் பணிக்காக தோண்டப்பட்ட சாலைகளை சீரமைத்து, விபத்துகள் ஏற்படுவதை தடுக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷமிடப்பட்டது.

மேலும், சாலை விபத்தில் சிக்கி அடிபட்டதுபோல தலை, கைகளில் கட்டுகட்டியும், ஊன்றுகோல் உதவியுடன் நடப்பதுபோலவும் சிலர் பங்கேற்றனர்.

கட்சியின் மாநில பொருளாளர் ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் சிவசாமி, துணைச் செயலாளர் தங்கவேல், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினரும், மாமன்ற உறுப்பினருமான சாந்தி சந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்துஸ்தான் பள்ளி மாணவி யோகாவில் உலக சாதனை

கோவை, நவ. 5: கோவை, பீளமேடு இந்துஸ்தான் மெட்ரிக். பள்ளி மாணவி எஸ்.சஞ்சனா யோகாவில் உலக சாதனைப் படைத்துள்ளார்.

இது குறித்து பள்ளி நிர்வாகம் கூறியிருப்பதாவது: இந்துஸ்தான் மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியின் 5-ஆம் வகுப்பு மாணவி எஸ்.சஞ்சனா பல்வேறு யோகா போட்டிகளில் பங்கேற்று வருகிறார். இந்நிலையில், அவர் ஒற்றைக் காலில் நின்றபடியே 50 வகையான யோகாசனங்களை செய்து சாதனைப் படைத்துள்ளார்.

இவரது சாதனையை, பிரேவ்ஃபிட் அகாதெமியின் நிறுவனரும், சோழன் உலக சாதனைப் புத்தகத்தின் மாவட்டத் தலைவருமான பாலமுரளி கிருஷ்ணா கண்காணித்து சாதனைப் படைத்த மாணவிக்கு சான்றிதழ், பதக்கங்களை வழங்கினார். சாதனைப் படைத்துள்ள மாணவியை இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் தாளாளர் சரஸ்வதி கண்ணையன், செயலர் பிரியா சதீஷ் பாபு, பள்ளி முதல்வர் ஆ.செண்பகவல்லி உள்ளிட்டோர் பாராட்டினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உலக சாதனை பாராட்டுச் சான்றிதழுடன் மாணவி எஸ்.சஞ்சனா.

விழிப்புணர்வுப் பேரணி...



கண்காணிப்பு விழிப்புணர்வு வார விழாவையொட்டி, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியாவின் கோவை மண்டல அலுவலகம் சார்பில் ரேஸ்கோர்ஸ் பகுதியில் வங்கியின் கோவை மண்டலத் தலைவர் எஸ்.ஏ.ராஜ்குமார் தலைமையில், கோவை பிராந்தியத் தலைவர் எஸ்.எஸ்.லாவண்யா முன்னிலையில் நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்ற அலுவலர்கள், பணியாளர்கள்.

மேட்டுப்பாளையத்தில்

தூய்மைப் பணியாளர்களுக்கு நலத் திட்ட உதவி



மேட்டுப்பாளையம் நகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கிய என்.சுனில் ஆனந்த் எம்.எல்.ஏ.

மேட்டுப்பாளையம், நவ.5: தீபாவளியை முன்னிட்டு, மேட்டுப்பாளையம் நகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள், அலுவலர்களுக்கு தவெக சார்பில் நலத் திட்ட உதவிகள் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு 18-ஆவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் பி.சுனில்குமார் தலைமை வகித்தார். நகரச் செயலாளர் காஜா, தெற்கு நகரச் செயலாளர் எம்.பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் தஸ்லீம் வரவேற்றார். மேட்டுப்பாளையம் சட்டப் பேரவை உறுப்பினர் என்.சுனில் ஆனந்த் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, 350 பயனாளிகளுக்கு ரூ.4 லட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில், புறநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் வி.ராஜ்குமார், காங்கிரஸ் கட்சி நகரத் தலைவர் தங்கமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் ராசு, தொல்குடி மைந்தன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வடக்கு மாவட்டத் தலைவர் அயூப், அரசு வழக்குரைஞர் இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மகளிர் அணி நிர்வாகி நமீரா நன்றி கூறினார்.

இன்றைய நிகழ்ச்சி

கங்கா மருத்துவமனை நிறுவனர்கள் தின சொற்பொழிவு: சிறப்பு விருந்தினர்கள்– ஹைதராபாத் ஏஐஜி மருத்துவமனைகளின் தலைவர் டாக்டர் நாகேஸ்வர ரெட்டி, சந்திரா குரூப் அறக்கட்டளை நிறுவனர் நந்தினி ரங்கசாமி, கங்கா மருத்துவமனை அரங்கம், கோவை, மாலை 5.

பொது அறிவிப்பு

பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்து தொடர்பான அசல் உரிமை ஆவணம் (ஆவண எண்: 2763/2004, தேதி: 02.06.2004) காணப்படவில்லை. இந்த ஆவணம், 'M/s அம்மன் ஸ்பின்னிங் மில்ஸ்' என்ற பெயரில் உள்ள OCC கணக்கு எண்: 20277348577-க்கான பிணையாக, இந்திய வங்கியின் (முன்னர் அலகாபாத் வங்கி) கல்தான்பேட்டை கிளையில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது. வங்கியின் பாதுகாப்பில் இருந்தபோது தொலைந்தோ/தவறுதலாக வேறு ஏதாவது வகையில் தொலைந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

மேற்கூறிய கடன் கணக்கிற்காக, 17.08.2006 தேதியிட்ட ஆவண எண்: 6862/06-ன் வாயிலாக, இந்த ஆவணம் அடமானத்தின் பேரில் வங்கியில் கொடுக்கப்பட்டுள்ளது.

சொத்தின் விவரம்:

திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், பல்லடம் தாலுக்கா, வரப்பட்டி கிராமம், அரசு எண்: 860-ன் 2.96 ஏக்கர் நிலத்தில் 2.88 ஏக்கர் நிலம். அதன் எல்லைகள் பின்வருமாறு: நாகரத்தினத்திற்கு சொந்தமான 10 சென்ட் கிழக்கு மேற்கு வழிப்பாதை. கிழக்காக : திருப்பூர் - பொள்ளாச்சி சாலை. வடக்காக : ஜிஎஸ். எண்.881-ன் கலை. மேற்காக : எண்.879-ன் கலை.

மேற்கூறிய அசல் உரிமை ஆவணங்கள் யாரிடமாவது இருந்தாலோ, அல்லது இந்தச் சொத்து அல்லது ஆவணங்கள் மீது ஏதேனும் உரிமை, பற்று, பொறுப்பு அல்லது வில்லங்கங்கள் ஏதும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் கீழே கையொப்பமிட்டுள்ள நபருக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்படாத பட்சத்தில், யாருக்கும் எந்தவித உரிமைகோரலோ அல்லது ஆட்சேபனையோ இல்லை என்று கருதப்படும். அதன் பிறகு, சட்டப்படி இந்த ஆவணங்களுக்குப் பதிலாக நகல் ஆவணங்களைப் பெறுவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளும்.

மேற்கூறிய அசல் உரிமை ஆவணங்களைக் கண்டெடுக்கும் எவரும், அவற்றை பின்வரும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்: கிளை மேலாளர், இந்தியன் வங்கி, கல்தான்பேட்டை கிளை, 7/413, பொள்ளாச்சி மெயின் ரோடு, கல்தான்பேட்டை, சூலூர் தாலுகா, கோயம்புத்தூர் - 641669.

இடம்: கல்தான்பேட்டை; தேதி: 05.11.2026		இந்தியன் வங்கி

இந்தியன் வங்கி - மணி கூண்டு கிளை
29, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 14.
தொலைபேசி : 044-28516661, 28411274.
மின்னஞ்சல் : clocktower@indianbank.bank.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 3-க்கு ஏற்ப எங்கள் மணி கூண்டு கிளையின் கடன்தாரர்/கள் : **(1) திரு. பிரகாஷ் D, (கடன்தாரர்/அடமானதாரர்)**, த/பெ திரு துரை சாமி S, எண்.6, மெயின் ரோடு, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி - 605 754, **(2) திருமதி. ஜோதி மேரி D, (இணை-கடன்தாரர்/ அடமானதாரர்)**, க/பெ திரு துரை சாமி S, எண்.6-937, APS கார்டன், AAY கவுண்டம் பாளையம், அவிநாசி, கோயம்புத்தூர் - 641 654, ஆகியோருக்கு **10.08.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, அதில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையான **ரூ.36,44,551.86 (ரூபாய் முப்பத்து ஆறு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா எண்பத்து ஆறு மட்டும்)** மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8-க்கு இணங்கவும், **02 நவம்பர் 2026** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்து இந்தியன் வங்கிக்கு **02.11.2026** தேதி வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.36,50,551.86 (ரூபாய் முப்பத்து ஆறு லட்சத்து ஐம்பதாயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா எண்பத்து ஆறு மட்டும்)** மற்றும் வட்டிகள், செலவுகள் மற்றும் கட்டணங்களுக்கும் சேர்த்து பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக்கொள்ள கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அசையா சொத்தின் விவரம்

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு:

அடமான சொத்து : பட்டா எண்.7006-ன்படி சர்வே எண்.42/1-ல் அடங்கியுள்ள ஏக்கர் 2.50 செண்டுகள் பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் சர்வே எண்.43/1-பகுதியில் அடங்கியுள்ள ஏக்கர் 7.68 செண்டுகளிலிருந்து ஏக்கர் 6.22 செண்டுகள் பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் பட்டா எண்.7054-ன்படி துணை பிரிக்கப்பட்ட புதிய சர்வே எண்.43/1B மற்றும் மொத்தம் ஏக்கர் 8.72 செண்டுகள் பரப்பளவு கொண்ட நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். போளிவாக்கம் கிராமம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது. இது மணவாளநகர் துணை பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. சர்வே எண்.43/1-பகுதியில் உள்ள ஏக்கர் 6.22 செண்டுகள் பரப்பளவு கொண்ட நிலத்தின் எல்லைகள் - வடக்கில் : திருமதி M. சாந்தி மற்றும் திருமதி. R. சாந்தி அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில் : திருமதி குட்டியம்மாள் அவர்களுக்கு சொந்தமான நிலம், கிழக்கில் : திரு கன்னியப்பா ரெட்டி அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில் : திரு கன்னப்பா ரெட்டி அவர்களுக்கு சொந்தமான நிலம்.

தேதி : 02.11.2026		அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இடம் : திருவள்ளூர்		இந்தியன் வங்கி.

HDB FINANCIAL SERVICES – HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவரங்புரா, அகமதாபாத் - 09. பிராந்திய அலுவலகம் : தரைத்தளம், ஜெனித் ஹவுஸ், கேசவ்ராவ் காத்யே மார்க், பந்தய மைதானம் எதிரில், மகாலட்சுமி, மும்பை - 34. தொ.பே. : 022-39586300. கிளை அலுவலகம் : HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், உத்தம் காம்ப்ளக்ஸ், முதல் தளம், 9-12, ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009, தமிழ்நாடு. இணையதளம் : www.hdbfs.com; மின்னஞ்சல் : compliance@hdbfs.com

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
(கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர் / பொதுமக்களுக்கு)
(SARFAESI சட்டம், 2002 விதி 8(6) உடன் படிக்கப்படும் விதி 9(1)இன் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை **"உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யும் உரிமையுடன் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

1. விண்ணப்பதாரர் மற்றும் கூட்டு விண்ணப்பதாரர்களின் பெயர் மற்றும் முகவரி : 1. செங்காளியப்பா இண்டஸ்ட்ரீஸ், செங்காளியப்பா இண்டஸ்ட்ரீஸ், 214/5, அஞ்சுகம் நகர், RC கார்டன், சின்னவேடம்பட்டி, கோயம்புத்தூர்-641049, தமிழ்நாடு. **மேலும்:**பட்டா எண் 206, S.F. எண் 214/5, கதவு எண் 214/5, RC கார்டன், அஞ்சுகம் நகர், சின்னவேடம்பட்டி கிராமம், காந்திபுரம் சார்பதிவு அலுவலகம், கோயம்புத்தூர்-641049. **மேலும்:** S.F. எண் 269/1, கதவு எண்கள் 9/3, 10, 10A மற்றும் 10/1, கணேசர் தெரு, சுப்பநாயக்கன்புதூர், சின்னவேடம்பட்டி கிராமம், காந்திபுரம் சார்பதிவு அலுவலகம், கோயம்புத்தூர் - 641049. **2. P விக்னேஸ்வரன்,** 10A, கணேசர் தெரு, சுப்பநாயக்கன்புதூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர், கோயம்புத்தூர்-641049, தமிழ்நாடு. **3. பொன்னுசாமி S,** 10A, கணேசர் தெரு, சுப்பநாயக்கன்புதூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர், கோயம்புத்தூர்-641049, தமிழ்நாடு. **4. வசந்தாமணி P,** 10A, கணேசர் தெரு, சுப்பநாயக்கன்புதூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர், கோயம்புத்தூர்-641049, தமிழ்நாடு. **2. கடன் கணக்கு எண்கள்: 10656117, 15060043. 3. மொத்த நிலுவைத் தொகை: கடன் எண் 10656117க்கு ரூ.12,29,227.16/- (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருநூற்று இருபத்தேழு மற்றும் பைசா பதினாறு மட்டும்); கடன் எண் 15060043க்கு ரூ.94,910/- (ரூபாய் தொண்ணூற்று நான்காயிரத்து தொள்ளாயிரத்து பத்து மட்டும்); 04.11.2026 அன்றின்படி** இரண்டு கடன்களுக்கும் மொத்தம் **ரூ.13,24,137.16 (ரூபாய் பதின்மூன்று இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று முப்பத்தேழு மற்றும் பைசா பதினாறு மட்டும்),** முழுத் தொகையும் செலுத்தப்படும் நாள் வரையிலான மேல்வட்டி / இதர செலவுகள் / கட்டணங்களுடன்.

ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திற்குத் தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதன் விவரம்: இல்லை.

அசையாச் சொத்துக்களின் விவரம் : ஈட்டுச் சொத்துக்களின் அட்டவணை I : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, சின்னவேடம்பட்டி கிராமம், நத்தம் S.F. எண் 269/1, சுப்பநாயக்கன்புதூர் ஊர்க்காட்டில் அமைந்துள்ள சொத்து. இதன் வடகிழக்கு மூலையிலிருந்து தெற்காக 54 அடி; அப்புள்ளியிலிருந்து வடக்கு குறுக்காக மேற்கில் 45 அடி; அப்புள்ளியிலிருந்து தெற்கு குறுக்காக 45 அடி; அப்புள்ளியிலிருந்து வடக்காக 33½ அடி; அப்புள்ளியிலிருந்து கிழக்காக 21½ அடி; அப்புள்ளியிலிருந்து தெற்காக 14½ அடி; அப்புள்ளியிலிருந்து கிழக்காக 20 அடி; அப்புள்ளியிலிருந்து வடக்கு குறுக்காக 4½ அடி; அப்புள்ளியிலிருந்து கிழக்கு குறுக்காக 9 அடி; அப்புள்ளியிலிருந்து வடக்காக 21 அடி; அப்புள்ளியிலிருந்து கிழக்காக 41 அடி. சுமார் 3506 சதுர அடி பரப்பளவுள்ள சொத்து, அதில் கட்டப்பட்டுள்ள RCC கட்டடங்கள், அவற்றின் கதவுகள், பொருத்துதல்கள், நிலையான பொருட்கள் உள்ளிட்டவை மற்றும் பாதை உரிமைகளுடன் கூடியது. **வடக்கு:**சின்னம் தோட்டக் கிணறு; **தெற்கு:**சின்னம் தோட்டம் தெய்வானையம்மாள் மற்றும் நாச்சியப்ப கவுண்டர் மற்றும் இதர நபர்களின் சொத்து மற்றும் கிழக்கு மேற்கு பாதை; **கிழக்கு:**சின்ன தோட்டம் தெய்வானையம்மாள் சொத்து; **மேற்கு:**செல்லப்ப கவுண்டர் சொத்து. **ஈட்டுச் சொத்துக்களின் அட்டவணை II:**கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, சின்னவேடம்பட்டி கிராமம், இனம் S.F. எண் 214/5இல் சுமார் 62 சென்ட் பரப்பளவுள்ள நிலம், பாதை உரிமைகளுடன் கூடியது. இதில் 4 சென்ட் மற்றும் 57 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் திருமதி. V. பானுமதிக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 15 சென்ட் பரப்பளவுள்ள நிலம் திருமதி. S. சிவப்பிரியாவுக்கு தான செட்டில்மென்ட் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 43 சென்ட் நிலம் திரு. S. பொன்னுசாமி வசம் உள்ளது; எனது கருத்து மேற்கண்ட பரப்பளவிற்கு மட்டுமே உறுதிப்படுத்தப்படுகிறது. **வடக்கு:**வடமலை கவுண்டர் சொத்து; **தெற்கு:**கிருஷ்ணா கவுண்டர் சொத்து; **கிழக்கு:**மாரப்ப கவுண்டர் சொத்து; **மேற்கு:**தென்வடல் இட்டேரி.

கடனீட்டுச் சொத்துக்களின் அட்டவணை	குறைந்தபட்ச விலை	டேவணித்தொகை	ஏல உயர்வுத் தொகை	ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித்தொகை செலுத்த கடைசி நாள் மற்றும் நேரம்
சொத்து I	ரூ.1,21,00,828/-	ரூ.12,10,082.8/-	ரூ.1,00,000/-	10.12.2026 காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன்	09.12.2026 மாலை 05:00 மணி வரை
சொத்து II	ரூ.3,85,78,831.2/-	ரூ.38,57,883.12/-	ரூ.1,00,000/-	10.12.2026 காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன்	09.12.2026 மாலை 05:00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1) ஏல விற்பனையானது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் https://www.bankeauctions.com இணையதளத்தின் மூலம், எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன், இணையவழி e-ஏல முறையில் நடைபெறும். 2) ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் மூலம் https://bankeauctions.com இணையதளத்தில் தங்களது டேவணித்தொகையைச் சமர்ப்பிக்க வேண்டும். குறைந்தபட்ச விலையில் 10% டேவணித்தொகையை "HDB Financial Service Limited" பெயரில் வரையப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைவோலையாகச் செலுத்த வேண்டும். இணையதளத்தில் ஏலதாரர் ஒருமுறை பதிவு செய்த பின்னர், ஏல ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்கு முன்பாக, i) NEFT/RTGS செலுத்துச் சீட்டு அல்லது கேட்பு வரைவோலை நகல்; ii) PAN அட்டை நகல்; iii) அடையாளம் / முகவரிச் சான்று (KYC), அதாவது சுயச் சான்றொப்பமிட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / கடவுச்சீட்டு உள்ளிட்டவற்றின் நகல்களைப் பதிவேற்ற வேண்டும். இவை இல்லாவிட்டால் ஏலப்புள்ளி நிராகரிக்கப்படலாம். பிற்சேர்க்கைகள் II மற்றும் III ஐ (https://bankeauctions.com இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்) முறையாகப் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அவற்றின் ஸ்கேன் நகல்களையும் பதிவேற்ற வேண்டும். பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் உருவாக்குதல், விவரங்களைப் பதிவேற்றுதல், ஏல ஆவணங்களைச் சமர்ப்பித்தல், இணையவழிப் போட்டி ஏலத்தில் பயிற்சி / செயல்விளக்கம் உள்ளிட்ட உதவி தேவைப்படும் ஏலதாரர்கள், **C1 INDIA PRIVATE LIMITED, மனை எண் 68, 3ஆவது தளம், செக்டர் 44, குர்கான், ஹரியானா-122003; மின்னஞ்சல்: support@bankeauctions.com; தொடர்பு நபர்: 1. திரு. தரணி கிருஷ்ணா, andhra@c1india.com, தொ.பே.: 9948182222** ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம். 3) ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள் நேரில் ஆஜராகி தனிப்பட்ட முறையில் பங்கேற்க வேண்டும். தங்களுக்காகவே ஏலம் கேட்பதாக எழுத்தளவில் உறுதிமொழி அளிக்க வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். 4) ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை மேலாளர், **M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண் 9-12, உத்தம் காம்ப்ளக்ஸ், முதல் தளம், ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர்-641009** என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். 5) ஆர்வமுள்ள ஏலதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தில் மட்டும் தங்களது ஏலப்புள்ளிகளைப் பூர்த்தி செய்து, அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் பெயரிட்ட மூடிய உறைகளில், குறைந்தபட்ச விலையில் 10% டேவணித்தொகைக்கான "HDB Financial Service Limited" பெயரில் வரையப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைவோலையுடன், இங்கு அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்காக 09.12.2026 அன்று மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். 6) சொத்தைப் பார்வையிடவும் இதர விவரங்களுக்கும் ஆர்வமுள்ள வாங்குபவர்கள், **M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண் 9-12, உத்தம் காம்ப்ளக்ஸ், முதல் தளம், ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர்-641009; அதிகாரப்பூர்வ அலுவலர் திரு. மணிகண்டன் - 8220855303, திரு. ரஞ்சித் - 9952535434** ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம். 7) சொத்து **"உள்ளது உள்ள இடத்தில்"** மற்றும் **"உள்ளது உள்ளபடி"** என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது. 8) இங்கு அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்கான மூடிய ஒப்பந்தப்புள்ளிகள், ஆர்வமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் **10.12.2026 அன்று காலை 11 மணிக்கு** திறக்கப்படும். பொதுவாக மூடிய ஒப்பந்தப்புள்ளி முறையில் விற்பனை நடைபெற்றாலும், அந்த முறையில் பெறப்பட்ட தொகையைவிட அதிகமாக ஏலம் கேட்க விரும்பும் ஏலதாரர்களிடையே வெளிப்படையான ஏலத்தை நடத்த அதிகாரப்பூர்வ அலுவலர் தமது தனிப்பட்ட விருப்புரிமையின்படி முடிவு செய்யலாம். அவ்வாறு நடைபெற்றால் அதிகபட்ச ஏலத்தொகை கோரியவருக்கு விற்பனை வழங்கப்படும். இருப்பினும், விற்பனை **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டின்** உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டது. 9) வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை முடிவடைந்த அதே நாளில் உடனடியாக அல்லது அடுத்த வேலை நாளுக்குள் விற்பனைத் தொகையில் 25%-ஐ (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகையை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து **15 நாட்களுக்குள்** செலுத்த வேண்டும். தவறினால், முதலில் செலுத்திய 25% தொகை பறிமுதல் செய்யப்படும்; எந்த நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது. மேலே குறிப்பிட்டபடி மொத்த ஏலத்தொகையில் 25%ஐ வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்தத் தவறினால், அடுத்த வெற்றிகரமான ஏலதாரர் பரிசீலிக்கப்பட்டு விற்பனையை முடித்துக்கொள்ள உரிமை பெறுவார். 10) இங்கு நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் முழு விற்பனைத் தொகையும் பெறப்பட்ட பின்னரே, அதிகாரப்பூர்வ அலுவலரால் வெற்றி பெற்ற வாங்குபவர் பெயரில் விற்பனைச் சான்றிதழ் வழங்கப்படும். 11) சட்டப்படி பொருந்தக்கூடிய முத்திரைத்தீர்வை, பதிவுக் கட்டணம் உள்ளிட்ட சொத்து உரிமை மாற்றத்திற்கான செலவுகள் / கட்டணங்களை வெற்றி பெற்ற வாங்குபவரே ஏற்க வேண்டும். 12) அரசு, அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சட்டப்படியான நிலுவைகள் (சட்டப்பூர்வ வீட்டு வரி, மின் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்), TDS மற்றும் GST ஏதேனும் இருப்பின் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்த வேண்டும். 13) எந்தக் காரணமும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகள் / ஏலப்புள்ளிகள் / விலைப்புள்ளிகளை ஏற்கவோ நிராகரிக்கவோ, ஏலத்தை ஒத்திவைக்கவோ தள்ளிவைக்கவோ ரத்து செய்யவோ அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமை உண்டு. எந்தக் காரணமும் தெரிவிக்காமல் மற்றும் முன் அறிவிப்பு ஏதுமின்றி விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும் அவருக்கு உரிமை உண்டு.

நாள் : 04.11.2026, இடம் : கோயம்புத்தூர்		ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

HDB FINANCIAL SERVICES – HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவரங்புரா, அகமதாபாத்-09. **பிராந்திய அலுவலகம்:** தரைத்தளம், ஜெனித் ஹவுஸ், கேசவ்ராவ் காத்யே மார்க், பந்தய மைதானம் எதிரில், மகாலட்சுமி, மும்பை-34, தொ.பே.: 022-39586300. **கிளை அலுவலகம்:** HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், உத்தம் காம்ப்ளக்ஸ், முதல் தளம், 9-12, ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர்-641009, தமிழ்நாடு. இணையதளம்: www.hdbfs.com; மின்னஞ்சல்: compliance@hdbfs.com

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
(கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர் / பொதுமக்களுக்கு)
(SARFAESI சட்டம், 2002 விதி 8(6) உடன் படிக்கப்படும் விதி 9(1)இன் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை **"உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யும் உரிமையுடன் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். 1. **விண்ணப்பதாரர் மற்றும் கூட்டு விண்ணப்பதாரர்களின் பெயர் மற்றும் முகவரி: 1. ஸ்ரீ மகாலட்சுமி அசோசியேட்ஸ், ஸ்ரீ மகாலட்சுமி அசோசியேட்ஸ்,** எண் 9, SR அவென்யூ, விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்-641035, தமிழ்நாடு. **மேலும்:** கதவு எண் 9, மனை எண் 9B, S.F. எண்கள் 228/1, 228/1B, அவென்யூ பேஸ் III, விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்-641035, கோயம்புத்தூர்-641035. **2. சுரேஷ் குமார் S,** எண் 9, SR அவென்யூ, விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்-641035, தமிழ்நாடு. **3. சந்திரிகா A,** எண் 9, SR அவென்யூ, விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்-641035, தமிழ்நாடு. 2. **கடன் கணக்கு எண்: 2878363. 3. மொத்த நிலுவைத் தொகை: 04.11.2026 அன்றின்படி ரூ.31,68,297.49/-(ரூபாய் முப்பத்தொரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு மற்றும் பைசா நாற்பத்தொன்பது மட்டும்),** முழுத் தொகையும் செலுத்தப்படும் நாள் வரையிலான மேல்வட்டி / இதர செலவுகள் / கட்டணங்களுடன்.
ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திற்குத் தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதன் விவரம்: இல்லை.
அசையாச் சொத்தின் விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கணபதி சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, விளாங்குறிச்சி கிராமம், S.F. எண் 228/1இல் புஞ்சை 12.67 ஏக்கர், உட்பிரிவின்படி S.F. எண் 228/1Bஇல் புஞ்சை 1.50 ஏக்கர் நிலம் வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டதில், கடை மனை எண் 9 இன் வடபுறப் பகுதி (9B) கொண்ட சொத்து. எல்லைகள்: மனை எண் 9 இன் தென்புறப் பகுதிக்கு (9A) வடக்கில்; மனை எண் 12க்கு கிழக்கில்; மனை எண் 10க்கு தெற்கில்; 23 அடி அகல தென்வடல் மனைப்பிரிவுச் சாலைக்கு மேற்கில். இதற்குள் கிழமேல் இருபுறமும் 45 அடி; வடக்கு தெற்கு இருபுறமும் 31 அடி அளவுகளில் 1395 சதுர அடி பரப்பளவுள்ள சொத்து, பாதை உரிமைகளுடன் கூடியது. இச்சொத்து S.R அவென்யூ பேஸ் III இல் அமைந்துள்ளது.

குறைந்தபட்ச விலை	டேவணித்தொகை	ஏல உயர்வுத் தொகை	ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித்தொகை செலுத்த கடைசி நாள் மற்றும் நேரம்
ரூ.78,20,600/-	ரூ.7,82,060/-	ரூ.1,00,000/-	10.12.2026 காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன்	09.12.2026 மாலை 05:00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1)ஏல விற்பனையானது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் https://www.bankeauctions.com இணையதளத்தின் மூலம், எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன், இணையவழி e-ஏல முறையில் நடைபெறும். 2)ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் மூலம் https://bankeauctions.com இணையதளத்தில் தங்களது டேவணித்தொகையைச் சமர்ப்பிக்க வேண்டும். குறைந்தபட்ச விலையில் 10% டேவணித்தொகையை "HDB Financial Service Limited" பெயரில் வரையப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைவோலையாகச் செலுத்த வேண்டும். இணையதளத்தில் ஏலதாரர் ஒருமுறை பதிவு செய்த பின்னர், ஏல ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்கு முன்பாக, i) NEFT/RTGS செலுத்துச் சீட்டு அல்லது கேட்பு வரைவோலை நகல்; ii) PAN அட்டை நகல்; iii) அடையாளம் / முகவரிச் சான்று (KYC), அதாவது சுயச் சான்றொப்பமிட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / கடவுச்சீட்டு உள்ளிட்டவற்றின் நகல்களைப் பதிவேற்ற வேண்டும். இவை இல்லாவிட்டால் ஏலப்புள்ளி நிராகரிக்கப்படலாம். பிற்சேர்க்கைகள் II மற்றும் III ஐ (https://bankeauctions.com இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்) முறையாகப் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அவற்றின் ஸ்கேன் நகல்களையும் பதிவேற்ற வேண்டும். பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் உருவாக்குதல், விவரங்களைப் பதிவேற்றுதல், ஏல ஆவணங்களைச் சமர்ப்பித்தல், இணையவழிப் போட்டி ஏலத்தில் பயிற்சி / செயல்விளக்கம் உள்ளிட்ட உதவி தேவைப்படும் ஏலதாரர்கள், **C1 INDIA PRIVATE LIMITED, மனை எண் 68, 3ஆவது தளம், செக்டர் 44, குர்கான், ஹரியானா-122003; மின்னஞ்சல்: support@bankeauctions.com; தொடர்பு நபர்: 1. திரு. தரணி கிருஷ்ணா, andhra@c1india.com, தொ.பே.: 9948182222** ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம். 3) ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள் நேரில் ஆஜராகி தனிப்பட்ட முறையில் பங்கேற்க வேண்டும். தங்களுக்காகவே ஏலம் கேட்பதாக எழுத்தளவில் உறுதிமொழி அளிக்க வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். 4) ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை மேலாளர், **M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண் 9-12, உத்தம் காம்ப்ளக்ஸ், முதல் தளம், ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர்-641009 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.** 5) ஆர்வமுள்ள ஏலதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தில் மட்டும் தங்களது ஏலப்புள்ளிகளைப் பூர்த்தி செய்து, அதிகாரப்பூர்வ அலுவலர், **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** பெயரிட்ட மூடிய உறைகளில், குறைந்தபட்ச விலையில் 10% டேவணித்தொகைக்கான "HDB Financial Service Limited" பெயரில் வரையப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைவோலையுடன், இங்கு அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்காக **09.12.2026** அன்று மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். 6) சொத்தைப் பார்வையிடவும் இதர விவரங்களுக்கும் ஆர்வமுள்ள வாங்குபவர்கள், **M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண் 9-12, உத்தம் காம்ப்ளக்ஸ், முதல் தளம், ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர்-641009; அதிகாரப்பூர்வ அலுவலர் திரு. மணிகண்டன் - 8220855303, திரு. ரஞ்சித் - 9952535434 ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம்.** 7) சொத்து **"உள்ளது உள்ள இடத்தில்"** மற்றும் **"உள்ளது உள்ளபடி"** என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது. 8) இங்கு அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்கான மூடிய ஒப்பந்தப்புள்ளிகள், ஆர்வமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் **10.12.2026 அன்று காலை 11 மணிக்கு** திறக்கப்படும். பொதுவாக மூடிய ஒப்பந்தப்புள்ளி முறையில் விற்பனை நடைபெற்றாலும், அந்த முறையில் பெறப்பட்ட தொகையைவிட அதிகமாக ஏலம் கேட்க விரும்பும் ஏலதாரர்களிடையே வெளிப்படையான ஏலத்தை நடத்த அதிகாரப்பூர்வ அலுவலர் தமது தனிப்பட்ட விருப்புரிமையின்படி முடிவு செய்யலாம். அவ்வாறு நடைபெற்றால் அதிகபட்ச ஏலத்தொகை கோரியவருக்கு விற்பனை வழங்கப்படும். இருப்பினும், விற்பனை **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டின்** உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டது. 9) வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை முடிவடைந்த அதே நாளில் உடனடியாக அல்லது அடுத்த வேலை நாளுக்குள் விற்பனைத் தொகையில் 25% ஐ (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகையை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து **15 நாட்களுக்குள்** செலுத்த வேண்டும். தவறினால், முதலில் செலுத்திய 25% தொகை பறிமுதல் செய்யப்படும்; எந்த நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது. மேலே குறிப்பிட்டபடி மொத்த ஏலத்தொகையில் 25% ஐ வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்தத் தவறினால், அடுத்த வெற்றிகரமான ஏலதாரர் பரிசீலிக்கப்பட்டு விற்பனையை முடித்துக்கொள்ள உரிமை பெறுவார். 10) இங்கு நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் முழு விற்பனைத் தொகையும் பெறப்பட்ட பின்னரே, அதிகாரப்பூர்வ அலுவலரால் வெற்றி பெற்ற வாங்குபவர் பெயரில் விற்பனைச் சான்றிதழ் வழங்கப்படும். 11) சட்டப்படி பொருந்தக்கூடிய முத்திரைத்தீர்வை, பதிவுக் கட்டணம் உள்ளிட்ட சொத்து உரிமை மாற்றத்திற்கான செலவுகள் / கட்டணங்களை வெற்றி பெற்ற வாங்குபவரே ஏற்க வேண்டும். 12) அரசு, அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சட்டப்படியான நிலுவைகள் (சட்டப்பூர்வ வீட்டு வரி, மின் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்), TDS மற்றும் GST ஏதேனும் இருப்பின் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்த வேண்டும். 13) எந்தக் காரணமும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகள் / ஏலப்புள்ளிகள் / விலைப்புள்ளிகளை ஏற்கவோ நிராகரிக்கவோ, ஏலத்தை ஒத்திவைக்கவோ தள்ளிவைக்கவோ ரத்து செய்யவோ அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமை உண்டு. எந்தக் காரணமும் தெரிவிக்காமல் மற்றும் முன் அறிவிப்பு ஏதுமின்றி விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும் அவருக்கு உரிமை உண்டு.

நாள்: 04.11.2026, இடம்: கோயம்புத்தூர்		ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்